# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

நேரம் : 1.30 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள் : 50

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:- 5×1=5

1) தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

அ) எலியாஸ் ஹோவே ஆ) எலி-விட்னி

இ) சாமுவேல் கிராம்டன் ஈ) ஹம்ப்ரி டேவி

2) சிலேட்டரை அமெரிக்கத் தொழில் புரட்சியின் தந்தை என அழைத்தவர் யார்?

அ) எப்.டி. ரூஸ்வெல்ட் ஆ) ஆண்ட்ரூ ஜேக்சன்

இ) வின்ஸ்டன் சர்ச்சில் ஈ) உட்ரோ வில்சன்

3) இந்தியாவுடன் வணிக உறவை நிறுவிக்கொண்ட முதல் ஐரோப்பிய நாட்டினர்

அ) போர்த்துகீசியர் ஆ) பிரெஞ்சுக்காரர்

இ) டேனிஷார் ஈ) டச்சுக்காரர்

4) தீ விபத்து ஏற்படும்போது நீங்கள் அழைக்கும் எண்

அ) 114 ஆ) 112 இ) 115 ஈ) 11

5) வெளிகுடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்ட

அ) இராமநாதபுரம் ஆ) கோயம்புத்தூர்

இ) சென்னை ஈ) வேலூர்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:- 5×1=5

6) _______ உலகம் முழுவதும் சாலைகள் அமைக்கப்படும் முறையை மாற்றியமைத்தது.

7) ஜெர்மனியில் முதல் இருப்புப்பாதை _______ ஆண்டில் இயக்கப்பட்டது.

8) ஆங்கிலேயரின் முக்கிய வருவாயாக திகழ்ந்தது _______ ஆகும்

9) _______ மற்றும் _______ அடிப்படையில் இடப்பெயர்வு கணக்கிடப்படுகிறது

10) 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கிராமப்புற இந்தியாவில் _______ சதவீத மக்கள் இடம் பெயர்ந்தவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

பகுதி - II

III. கீழ்க்காணும் கேள்விகளுக்குச் சுருக்கமாகப் பதிலளிக்கவும்

ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 10×2=20

11) இங்கிலாந்தில் நகரமயமாதலுக்கான காரணங்களைக் கூறு.

12) ஹே மார்க்கெட் படுகொலை பற்றிக் குறிப்பு வரைக.

13) லூயி ரெனால்ட் பற்றி நீங்கள் அறிந்தது என்ன?

14) காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டவும்.

15) கர்னல் பென்னிகுயிக்

16) பேரிடர் முதன்மை மீட்புக்குழு என்பவர் யாவர்?
17) இந்தியாவில் ஒவ்வொரு நாளும் எத்தனை ஆண்கள், பெண்கள் ... இறக்கின்றனர்?
18) சுனாமிக்குப் பிறகு என்ன செய்ய வேண்டும்?
19) இருசக்கர வாகனம் ஓட்டும் போது தலைக்கவசம் அணிவதன் நன்மைகள் யாவை?
20) சாலை சமிக்ஞையில் எந்த நிறம் 'நில்' என்பதை உணர்த்துகிறது?
21) சாலை பாதுகாப்பு விதி ஏதேனும் மூன்றை கூறுக.
22) இடப்பெயர்தலுக்கான காரணங்களைப் பட்டியலிடுக.
23) இந்தியாவில் பெண்கள் இடப்பெயர்தலுக்கான முக்கியக் காரணங்கள் யாவை?
24) தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் செல்லும் நான்கு நாடுகள் மற்றும் சதவீதத்தினை பட்டியலிடுக

## பகுதி - III

**IV. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்:-** 4×5=20

25) இங்கிலாந்தின் தொழிற்புரட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
26) ஆப்பிரிக்காவில் காலனிஆதிக்கம் ஏற்பட்டதை விவரி?
27) நில நடுக்கத்தின்போது கட்டிடத்திற்குள் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
28) ஆழிப்பேரலையை எவ்வாறு எதிர்கொள்வாய்?
29) சாலை விபத்துக்கானக் காரணங்களை விவரி?
30) இடப்பெயர்வு கொள்கையின் நோக்கங்கள் யாவை?
31) தமிழ்நாட்டின் இடப்பெயர்வில் காணப்படும் ஆர்வமுள்ள தகவல்கள் சிலவற்றை தெளிவுபடுத்துக.
32) கீழ்கண்ட இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.

அ) இங்கிலாந்து ஆ) ஜெர்மனி இ) இந்தியா
ஈ) ஆப்பிரிக்கா உ) வடஅமெரிக்கா

******